**OS.NO**. 397/2023

**PW**.1 - திரு. அழகர் ராமானுஜம்

நாள். 13.08.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் அழகர் ராமானுஜம் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பிராது என்னால் தாக்கல் செய்யப்பட்டது தான். அந்த பிராதில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். பிராதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்ல சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நானும், பிரதிவாதியும் எத்தனை ஆண்டுகள் நண்பர்கள் என்பதை பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை. பிரதிவாதி எனக்கு எவ்வாறு பழக்கமானார் என்ற விவரத்தை பிராதில் சொல்லியுள்ளேன். பிரதிவாதி எனக்கு யார் மூலமாக பழக்கமானார் என்ற விவரத்தையும் நான் எனது பிராதில் சொல்லியுள்ளேன். பிரதிவாதி என்ன மாதிரியான தொழில் செய்து வருகிறார் என்ற விவரத்தை நான் பிராதில் சொல்லியுள்ளேன். பிரதிவாதி திருப்பரங்குன்றத்தில் கடை வைத்து நடத்தி வருவதாக பிராதில் சொல்லியுள்ளேன். பிரதிவாதி என்ன கடை நடத்தி வருகிறார் என்பதனை பெயர் குறிப்பிட்டு பிராதில் சொல்லியுள்ளேன். பிரதிவாதி நான் கொடுத்ததாக சொல்லப்படும் கடனை எந்த தேதியில் கேட்டார் என்ற விவரத்தை நான் பிராதில் சொல்லியுள்ளேன். பிரதிவாதி என்ன தொழில் அபிவிருத்தி செய்வதற்காக கடன் பெற்றார் என்ற விவரத்தை பிராதில் சொல்லியுள்ளேன். பிரதிவாதி ரூ.10, ரூ.20 பிளாஸ்டிக் தொழில் விற்பனை செய்யும் கடை நடத்தி வருகிறார். பிரதிவாதியிடம் நான் கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.11,00,000/—ஐ எந்த வழியில் திருப்பி தருவார் என்ற விவரத்தை நான் எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதி என்ன அவசர உதவிக்காக பணம் கேட்டார் என்ற விவரத்தை நான் பிராதில் சொல்லியுள்ளேன். எனது மகளின் திருமணத்திற்காக நான் எவ்வளவு ரூபாய் சேர்த்து வைத்திருந்தேன் என்ற விவரத்தை பிராதில் சொல்லியுள்ளேன். நான் அந்த பணத்தை வீட்டில் வைத்திருந்தேன். அவ்வளவு தொகையை வீட்டில் வைத்திருப்பது வருமான வரி சட்டப்படி

தவறு என்பது பற்றி எனக்கு தெரியாது. எனது மைத்துனர் அமெரிக்காவில் இருந்து ஊருக்கு வந்தபோது எனக்கு எனது மகளின் திருமணத்திற்காக கொடுத்த பணத்தை வாங்கி வைத்துள்ளேன் என்று பிராதில் சொல்லியுள்ளேன். நான் பிரதிவாதிக்கு கொடுத்தாக சொல்லப்படும் ரூ.11,00,000/– ஐ வங்கி கட்டுகளாக கொடுத்தேன். மேற்படி பணத்தை எந்த வங்கியிலிருந்து எடுத்தேன் என்ற விவரத்தை நான் பிராதில் குறிப்பிடவில்லை. நான் அந்த பணத்தை வங்கியிலிருந்து எடுக்கவில்லை, எனது மைத்துனர், உறவினர் மற்றும் தெரிந்த நபர்களிடமிருந்து வாங்கி வைத்திருந்தேன். நான் மேற்படி பணத்திற்கு வருமான வரி தாக்கல் செய்திருந்தேனா என்றால் இல்லை. நான் மேற்படி பணம் பெற்றதாக சொல்லப்படும் நண்பர்களின் பெயர்களை பிராதில் குறிப்பிடவில்லை. மேற்படி நண்பர்களிடமிருந்து எவ்வளவு பணம் பெற்றேன் என்ற விவரத்தை பிராதில் கூறியுள்ளேன். நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தபோது பிரதிவாதியிடமிருந்து ஏதேனும் ஆவணம் பெற்றேனா என்று என் பிராதில் குறிப்பிடவில்லை. பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.11,00,000/–த்திற்கு வட்டி எதுவும் பேசிக்கொள்ளவில்லை. அந்த விவரத்தை பிராதில் குறிப்பிடவில்லை. 18.09.2019ம் தேதி நான் பிரதிவாதியை சந்திக்கும்போது காசோலையை அவர் தான் தாமாக முன்வந்து கொடுத்தார். மேற்படி காசோலை 3 மாதம் பின்தேதி போட்டு கொடுக்கப்பட்டதாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி 3 மாதம் கழித்து மேற்படி காசோலை கொடுத்தபோது எனக்கு இழப்பு ஏற்பட்டதை பொறுத்து நான் பிரதிவாதியிடம் பேசிய விவரங்களை பிராதில் குறிப்பிட்டுள்ளேன். நான் பிரதிவாதிக்கு ரூ.11,00,000/–ஐ 22 ஐநூறு ரூபாய் நோட்டுகட்டுகளாக கொடுத்தேன். நான் எனது நண்பர்களிடமிருந்து எவ்வளவு ரூபாய் கடனாக பெற்றேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை. எனது நண்பர்கள் நான் கடன் வாங்கிய தொகையை 500 ரூபாய் நோட்டு கட்டுகளாக கொடுத்தார்கள். நான் பிரதிவாதிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வங்கியில் காசோலையை வசூலுக்கு போடுவதற்கு முன்பு பிரதிவாதியிடம் சொன்ன விவரத்தை பிராதில் குறிப்பிட்டுள்ளேன். வசூலுக்கு போட்ட காசோலை எந்த தேதியில் வங்கியிலிருந்து திருப்பப்பட்ட விவரத்தை பிரதிவாதிக்கு தெரிவித்து அந்த

விவரத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரதிவாதி என்னிடம் 3 மாதம் கழித்து காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் நான் கடனுக்காக எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றும் அவர் முன்பு என்னிடம் வாங்கிய கடனுக்கு என்னிடம் முன்பு கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தினேன் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு பதில் அறிவிப்பு கொடுத்த பிறகும் நான் வங்கி மேலாளருக்கு மிரட்டலான அறிவிப்பு கொடுத்த 2வது ரிட்டன் மெமோவை பெற்றுள்ளேன் என்றால் நான் அறிவிப்பு மட்டும் தான் அனுப்பினேன். என்னுடைய 2வது வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்டவுடன் பிரதிவாதியை நேரடியாக எந்த தேதியில் சந்தித்தேன் என்றும் எந்த தெரிந்த நபர்கள் மூலமாக கடனை எந்த தேதியில் திரும்ப கேட்டேன் என்ற விவரத்தை பிராதில் சொல்லவில்லை. நான் 2010ம் வருடத்திலிருந்து 2013ம் வருடம் வரை ஜாக்ரித் பாலிமர் நிறுவனத்தில் பணிபுரிந்தேன் என்ற விவரத்தை எனது பிராதில் சொல்லியுள்ளேன். மேற்படி நிறுவனத்தில் பணிபுரியும்போது எனது மாத வருமானம் எவ்வளவு என்பதை எனது பிராதிலும் நிரூபணவாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை. அதன்பின்னர் நான் வங்கியில் செக்யூரிட்டியாக பணிபுரிந்தபோது சம்பளம் எவ்வளவு வாங்கினேன் என்ற விவரத்தை பிராதில் சொல்லவில்லை. நான் வங்கியில் செக்யூரிட்டியாக பணிபுரிந்தபோது தான் மேற்படி கடனை கொடுத்தேன் என்ற விவரத்தை பிராதில் குறிப்பிடவில்லை. நான் வங்கியில் செக்யூரிட்டியாக பணிபுரியும் போது எனது மாத சம்பளம் ரூ.15,000/– ஆகும். பிரதிவாதி தான் கொடுத்த பதில் அறிவிப்பில் தாவா காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றோ, தாவா காசோலையை தான் தான் என்னிடம் கொடுத்தேன் என்றோ எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த தாவாவிற்கு முன்னர் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை இல்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக காவல்நிலையத்தில் பிரதிவாதி புகார் கொடுத்த விவரத்தை பிராதில் சொல்லியுள்ளேன். நான் எனது பிராதில் குறிப்பிடாத விவரங்களை நிரூபணவாக்குமூலத்தில் முன்னுக்கு பின் முராணக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் என்னிடமிருந்து எந்த

தொகையும் பிரதிவாதி கடனாக பெறவில்லை என்றும் அதற்கு எந்த காசோலையும் பிரதிவாதி கொடுக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி மீது அல்லது பிரதிவாதி என் மீதோ புகார் எந்த தேதியில் எந்த காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் அதனை பொறுத்து காவல்துறையினர் எடுத்த நடவடிக்கை குறித்து பிராதில் சொல்லியுள்ளேன். பிரதிவாதி காவல்துறையில் என் மீது கொடுத்த புகாரை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பல உண்மைகளை மறைத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 13.12.2019ம் தேதியன்று பிரதிவாதி எனக்கு எதிராக திருப்பரங்குன்றம் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்று எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது எதிருரையில் என்னிடமிருந்து சிறுக சிறுக கடன் வாங்கி அதனை திரும்ப செலுத்திவிட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் நிரூபணவாக்குமூலத்தில் தாவா கடனை தவிர எந்த கடனும் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன். நான் பொய்யான காரணங்களை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/- அழகர் ராமானுஜம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.13 06:41:16 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.